பாரவண்டி ஏற்றிச்செல்லும் எடை

*389 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாரம் ஏற்றிச்செல்லும் மாட்டுவண்டிகளில் ஏற்றிச் செல்வதற்கான அதிக பட்ச எடையின் அளவு குறிப்பிட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில் இவ்வளவு எடைச்சுமைதான் ஏற்றுதல் வேண்டுமென திட்டமிடும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) உரிய அளவுக்கு மேற்பட்ட பாரம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக அடியிற்கண்ட அம்சங்களைக் கவனிக்க வேண்டுமென அரசாங்கம் விதித்துள்ளது :—

(1) ஒரு பிராணி சுமந்து செல்லக்கூடிய உயர்ந்த அளவு பாரம் சாதாரணமாய் அதன் எடையில் பாதியாகும்.

(2) பாரவண்டிச் சக்கரம் இரும்புப் பட்டையுடன் இருந்தால், ஒரு பிராணி இழுத்துச் செல்லக்கூடிய உயர்ந்த அளவு பாரம் சாதாரணமாய் அதன் எடையைப்போல் இரு மடங்காகும். ரப்பர் பட்டையுள்ள சக்கரமாயிருந்தால் அப் பிராணி தன் எடையைப் போல் நான்கு மடங்கு பாரம் இழுத்துச் செல்ல முடியும்.

(3) அந்தந்த சாலையின் தன்மைக் கேற்ப மேலே (1) (2) பாராக்களில் கூறியுள்ள உயர்ந்த பட்ச பார அளவை மாற்றிக் கொள்ளவேண்டும்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

புலவர் கா. கோவிந்தன் : மாடுகள் இழுக்கும் வண்டிகளின் பாரம்பற்றிய விதிமுறைகளைச் சொன்னார்கள். மனிதன் இழுக்கின்ற பார வண்டிகளைப் பற்றிய விதிமுறைகள் ஏதேனும் இருக்கிறதா ? சென்னையில் இப்படி மனிதன் பார வண்டிகளை இழுத்துக்கொண்டிருப்பதை அறவே நீக்க வழிவகைகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது மாடு இழுக்கின்ற வண்டியைப் பற்றிய கேள்வி. மனிதன் இழுக்கின்ற வண்டியைப்பற்றித் தனிக் கேள்வி போட்டால் அதற்குத் தனியாகப் பதில் சொல்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த விதி முறைகள் சென்னை நகரத்திற்கு மட்டுமா ? வெளியிலும் இது அனுசரிக்கப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அநேகமாக இந்த விதி மாநிலம் பூராவுக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

*390 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையிலிருந்து திருச்சி செல்லும் கார்டு ரெயில்வே லைனில், மாத்தூருக்கும் பெண்ணாடத்திற்கும் இடையில் ஒரு புது